**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

Deposition of Witness for : PW-4　　Date : 27.03.2025
Case No. : **O.S.** 399/2019　　Nationality : Indian
Name : சீயான் ராபர்ட்　　Religion :
Father's/Husband's Name : சந்தானம்　　Age : 57
Village :
Taluk :

வா.சா.4

சாட்சி சத்திய பிரமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**1,3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் தம்பி ஆவார். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை யார் கூறியதென்றால் எனக்கே தெரியும். தேவசகாயம் பிள்ளைக்கு எத்தனை மனைவிகள் என்றால் ஒரே மனைவி தான். அவரின் பெயர் சவுரி அம்மாள் ஆகும். தேவசகாயம் பிள்ளைக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரியல்ல. தேவசகாயம் பிள்ளை எந்த தேதியில் இறந்தார் என்றால் தேதி ஞாபகம் இல்லை. 1916 ம் ஆண்டு இறந்தார். 1916 ம் ஆண்டு இறந்தற்கான ஆவணம் எதுவும் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த ஆவணம் வாதியால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு எந்த ஆவணம் எதுவும் வாதியால் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. தேவசகாயத்தின் வாரிசு சான்றிதழை பார்த்துள்ளேனா என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு வாரிசு சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

நான் சாமித்துரைக்கு ஆண் வாரிசுகள் இல்லை என சொல்லியதற்கு ஆவணம்

எதுவும் உள்ளதா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியவில்லை. அவருக்கு பெண் வாரிசுகள் யாரும் உள்ளார்களா என்றால் உள்ளார்கள். அவர்களின் பெயர் விபரம் தெரியவில்லை. ஆனால் அவர்கள் இறந்துவிட்டார்கள். தேவராஜ் எந்த தேதியில் இறந்தார் என்றால் தேதி மாதம் ஞாபகம் இல்லை. 2000 ம் ஆண்டு இறந்தார். சாமித்துரை எந்த தேதியில் இறந்தார் என்றால் எனக்குதெரியாது. வாதி என்னென்ன சர்வே எண்ணில் கண்ட சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் புல எண்கள் 127/11, 11 ஏ, 127/13, 13 ஏ, 127/16, 16 ஏ மற்றும் புல எண் 127/19, 19 ஏ ஆகும்.

மேற்படி சொத்துக்களை பொறுத்து தேவ சகாயம் பேரில் பதிவு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் OSR, RSR ஆகியவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தேவ சகாயத்திற்கு நான் நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள 8 நபர்கள் தான் வாரிசுகள் என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள முகவரியில் தான் வசிக்கிறேனா என்றால் நான் மலேசிய குடிமகன் ஆவேன். நான் இந்தியாவிற்கு வந்தால் அந்த முகவரியில் தங்குவேன். நான் மலேசிய குடிமகன் என்பதை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனக்கு வழக்கு விபரங்கள் எதுவும் தெரியாது என்றாலும், தேவ சகாயம் பிள்ளையின் வாரிசுகள் தொடர்பாக ஆவணங்கள் எதையும் நான் பார்த்ததில்லை என்றாலும் வாதி எனது சகோதரர் என்பதால் அவருக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் மலேசிய குடிமகன் என்பரை மறைத்து நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

**<u>4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

ஆரோக்கியசாமி எனது மாமனார் என்றால் ஆமாம். ஆரோக்கிசாமி மனைவி

அற்புதமேரி எனது மாமியார் என்றால் சரிதான். ஆரிட் மேரி என்பவர் எனது மனைவி என்றால் சரிதான். எனது மனைவி மற்றும் மாமியார் எனக்கு முன்பாக இவ்வழககில் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் நிரந்தரமாக மலேசியாவில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான்.வாதி எனது உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். எனக்கு அவரை தவிர வேறு சகோதரர்களும் உள்ளார்கள் என்றால் சரிதான். நானும் மற்ற சகோதரர்களும் இவ்வழககில் தரப்பினர்கள் இல்லை சரியல்ல. தரப்பினர்கள் தான்.

வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சொத்திற்கு இழப்பீடு கோரி தாக்கல் செய்துள்ளார். அதைத்தவிர வேறு பரிகாரம் கேட்கப்படவில்லை என்றால் சொத்துக்களை பொறுத்த சட்டப்படியான நடவடிக்கை கோரி தாக்கல் செய்துள்ளார். எனது தாத்தா பெயர் என்ன என்றால் சவரி முத்து என்ற சின்னதம்பி ஆகும். அவருடைய வாரிசு தான் எனது தந்தை சந்தானம் என்றால் சரிதான். சவரிமுத்துவின் உடன்பிறந்தவர்கள் தான் சாமித்துரை மற்றும் செல்வநாயகம் என்றால் சரிதான். சவரிமுத்து மற்றும் சந்தானம் ஆகியோரின் வாரிசு சான்றிதழ்களை தாக்கல் செய்துள்ளேனா் என்றால் தாக்கல் செய்துள்ளேன். தேவசகாயம் இறந்து சுமார் 100 வருடங்கள் ஆகிவிட்டது என்றால் சரிதான். தற்போது தேவசகாயத்தின் வாரிசு என்று கேட்டு தான் எனது தம்பி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தேவராஜுக்கு செல்வராஜ் மற்றும் ஜீவரத்திரனம் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். செல்ராஜுக்கு நான்கு பெண் குழந்தைகள் உள்ளார்கள் என்றால் சரியல்ல. 2 பெண் குழந்தைகள் உள்ளார்கள். பாத்திமா சிசிலி என்பவர் யார் என்றால் செல்வராஜின் தங்கை ஆவார். பாத்திமா சிசிலி தான் 4 ம் பிரதிவாதி எடிசனின் தாயார் என்றால் சரிதான். மேற்படி 2 பெண் குழந்தைகளை இவ்வழககில் தரப்பினர்களாக சேர்ந்துள்ளோமா என்றால் இல்லை.

தாவாச்சொத்துகளில் 3 இனச்சொத்துக்களை பொறுத்து 4 ம் பிரதிவாதி பட்டா ஏற்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. வாதி நீதிமன்றத்திற்கு வந்துள்ளாரா என்றால் இல்லை. எனது மாமனார் வந்துள்ளார். எனது தம்பி , மாமனார், மாமியார், ஆகியோர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களுக்கு கு அனுசரணையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்தை வெளி நபர்களை தவிர்த்து வெளிநபர்களை விசாரித்தால் உண்மை நிலவரம் தெரிய வரும் என்றால் தெரியும். எனக்கு வழக்கு விபரங்கள் தெரியாது என்றால் சரியல்ல. பாத்திமா சிசிலியின் தகப்பனார் பெயர் தேவராஜ்.

**5 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனது நிரூபண வாக்குமூலத்தை வழக்கறிஞர் தயார் செய்து கொடுததார் என்றால் சரிதான். அதில் உள்ள விபரங்களை நான் தான் சொன்னேன். 1 ம் பிரதிவாதி தந்தை பெயர் என்னவென்றால் எனக்கு தெரியாது. 2 ம் பிரதிவாதியின் தந்தை பெயர் என்னவென்றால் தேவராஜ். 3 ம் பிரதிவாதியின் தந்தை பெயர் தெரியுமா என்றால் தெரியாது. 4 ம் பிரதிவாதியின் தந்தை பெயர் என்னவென்றால் ஜான் ஆனந்த். வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தேவசகாயத்தின் சொத்துக்காக இழப்பீடு கோரி தாக்கல் செய்துள்ளார். தெய்வசகாயம் பிள்ளைக்கு 2 மனைவிகள் என்றால் சரியல்ல. வாதியின் தந்தை பெயர் சந்தானம். சந்தானத்தின் தந்தை பெயர் சவரிமுத்து என்ற சின்ன தம்பி. சவரிமுத்துவின் உடன் பிறந்தவர்கள் செல்வ நாயகம், சாமித்துரை ஆவார்கள். சாமித்துரை வாரிசுகள் இவ்வழககில் தரப்பினர்களாக உள்ளார்களா என்றால் இல்லை. செல்வநாயகத்தின் வாரிசுகள் இவ்வழக்கில் தரப்பினர்களாக உள்ளார்களா என்றால் இல்லை. 1 முதல் 4 பிரதிவாதிகள் என்ன வாரிசு உரிமையின் அடிப்படையில் உரிமை கோருகிறார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள முகவரியில் நான் வசித்து வருகிறேன் என்பதற்கு வட்டாட்சியரிடம் சான்று பெற்று தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. நான் மேற்படி முகவரியில் இந்தியா

வரும் போது மட்டும் தான் தங்குவேன். வாதி எனது தம்பி என்பதால் அவருக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது).**

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2025.04.10 11:01:55 +0530

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.